**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 158/2019</u>**

பெயர் : செல்வகுமார் P.W.1. Cross

த/பெ. : கணபதி

தேதி : 09.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>** –

1. நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்யவில்லை, ஆனால் நான் விற்பனை செய்துகொடுத்ததாக வில்லங்க சான்றிதழில் தெரியவந்ததால் அந்த ஆவணம் செல்லாது என கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எனது பெற்றோர் தாக்கல் செய்தார்கள். 3 முதல் 7 வாதிகள் எப்போது இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தோம் என்றால் எனது தகப்பனார் இறந்த பிறகு சேர்த்தோம்.

2. எனது தகப்பனார் கடந்த 2018ம் ஆண்டு இறந்தார். 1ம் வாதியான எனது தாயாரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது தந்தை PUC படித்துள்ளார். திருத்தப்பட்ட வழக்குரையில் வழக்கறிஞரை தவிர நாங்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். கையொப்பம் இல்லாத வழக்குரையை வைத்து நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. வாசாஆ 4 ற்கு முன்னிட்டு எனது பெற்றோர் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1 பகுதியை விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான். எவ்வளவு சொத்தை விற்பனை செய்தார்கள் என்றால் 2 ஏக்கர் விற்பனை செய்தார்கள். அதன் ஆவண எண் தெரியுமா என்றால் எனக்கு நினைவில் இல்லை. எவ்வளவு தொகைக்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. வில்லங்க சான்றை யார் மனு செய்து வாங்கினார்கள் என்றால் எனது தந்தை தான் வாங்கினார். விலலங்க சான்று வாங்கிய பிறகு எவ்வளவு காலம் கழித்து வழக்கு தாக்கல் செய்தோம் என்றால்

எனது தந்தைக்கு தான் தெரியும்.

3. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை. எங்களது அனுபவத்தில் உள்ளது. தாவா சொத்தில் சவுக்கு மற்றும் நெல் பயிர் செய்து வருகிறோம்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**